ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1966/23 - 2016 මැයි මස 11 වැනි බදාදා - 2016.05.11

*1966/23 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தாதியர் சேவைகள் பிரமாணக் குறிப்பில் மாற்றம் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1837/8 ஆம் இலக்க, 2013, நவெம்பர் 19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தாதியர் சேவைகள் பிரமாணக் குறிப்பில் 6.2.3.1.1, 6.2.4.1 மற்றும் 6.2.4.2 ஆம் பிரிவு பின்வருமாறு மாற்றம் செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

அநுர ஜயவிக்ரம,
செயலாளர்,
சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.
இல. 385,
வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு - 10,
2016, மே 11.

**சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

இலங்கை தாதியர் சேவைகள் பிரமாணக் குறிப்பு

6.2.3.1.1 க.பொ.த (உயர்தரம்) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :

கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (உயர்தரம்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவிற்கு உரிய உயிரில், இரசாயனவியல், விவசாயம், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலப் பரீட்சை தவிர)

அல்லது

கல்விப் பொதுத் தராதரச் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் கணிதப் பிரிவிற்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்கள் பயின்று அவ்வனைத்து பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலப் பரீட்சை தவிர).

*அத்துடன்*

*சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு (06) பாடங்களில் பொது தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

***6.2.4.1 ஒரு வருட கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர்தரம்) பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :***

*இங்கு இலங்கை முழுவதிலிருந்தும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய முழு எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*அதன் பின்னர் அந்த ஒவ்வொரு மாவட்டத்திலிலிருந்தும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை அந்த மாவட்டத்தில் உள்ள உயிரியல் விஞ்ஞான பிரிவிலிருந்தும், கணிதப் பிரிவிலிருந்தும் விண்ணப்பித்து சாதாரண நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்குச் சமவிகிதமாக பிரித்து உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு விடயப்பரப்பின் கீழும் ஆட்சேர்ப்புச் செய்யும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*அவ்வாறே ஒவ்வொரு விடயப்பரப்பின் கீழும் ஆட்சேர்ப்புச் செய்யும் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையின் 5% ஆண் விண்ணப்பதாரிகளும், 95% பெண் விண்ணப்பதாரிகளும் அடங்குமாறு மாவட்டத்தில் உயர்ந்த Z - புள்ளியைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து பயிற்சிக்கு அவசியமான எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

***6.2.4.2 இரண்டு வருடங்கள் (02) அல்லது அதற்கு அதிகமான வருடங்களில் கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தரம்) பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்.***

*இங்கு இலங்கை முழுவதிலிருந்தும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய முழு எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*அதன் பின்னர் அந்த ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை உரிய மாவட்டத்தின் ஒவ்வொரு வருடத்திலும் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு சமவிகிதாசாரத்தினால் பிரித்து உரிய மாவட்டத்திற்கு ஒவ்வொரு வருடத்திலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*இதன் பின்னர் அந்த ஒவ்வொரு வருடத்தினால் பிரித்து ஆட்சேர்க்கப்படவேண்டிய எண்ணிக்கை உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மற்றும் கணிதப் பிரிவில் விண்ணப்பித்து சாதாரண நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு சமனான விகிதாசாரத்தால் பிரித்து உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய ஒவ்வொரு விடயப் பிரிவின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*அவ்வாறே ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு விடயப்பரப்பின் கீழும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு அவ்வெண்ணிக்கையின் 5% ஆண் விண்ணப்பதாரிகளும், 95% பெண் விண்ணப்பதாரிகளும் உள்ளவாறு ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு விடயப்பரப்பின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z - புள்ளியை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.*

5- 747

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*